# செப்பனியா - முன்னுரை

## காலமும் இடமும்

கி.மு. 679 - 648 ஆம் வருஷங்களில் செப்பனியாவின் புஸ்தகம் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

## ஆசிரியர்

செப்பனியா தீர்க்கதரிசி (செப் 1:1)

## மையக்கருத்து

1. யூதர்கள்மீதும் புறஜாதியார்மீதும் அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாகத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்.
2. பக்தியுள்ள யூதர்மீதும், பக்தியுள்ள புறஜாதியார்மீதும் தேவனுடைய நன்மை வரும்.
3. யூதாவின்மீது பாபிலோன் மூலமாக உடனடியாக நியாயத்தீர்ப்பு வரும்.
4. கர்த்தருடைய நாளில் வருங்காலத்தில் பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு உண்டாகும். (செப் 1:1-18).
5. பாபிலோன்,பெலிஸ்தியா, மோவாப், அம்மோன், எத்தியோப்பியா, அசீரியா ஆகிய தேசங்கள் மூலமாகத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு புறஜாதியார் மீது உடடினயாக உண்டாகும். (செப் 2)
6. பாபிலோன் மூலமாக யூதாவின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு உடனடியாக உண்டாகும். வருங்காலத்தில் கர்த்தருடைய நாளிலும், மேசியாவின் ஆளுகையின்போதும், இஸ்ரவேலைப் பற்றி இந்தப் புஸ்தகத்தில் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. (செப் 3:1-20).
7. யூதா தேசத்தார் தேவனுடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்து இசைந்துபோக வேண்டும். இல்லை யெனில், அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமாய் வரும்.
8. மேசியாவின் இரண்டாம் வருகையின் போது, இஸ்ரவேலில் மீதியாக இருக்கிறவர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.

## புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 3

வசனங்கள் - 53

புதிய தீர்க்கதரிசனங்கள் - 3

கட்டளைகள் - 14

வாக்குத்தத்தங்கள் - 4

முன்னறிவிப்புக்கள் - 86

செப்பனியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (செப் 1:2; செப் 2:1; செப் 3:1,8).

## பொருளடக்கம்

I. யூதாவின்மீது உடனடி நியாயத்தீர்ப்பு

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி (1:1)
2. பதினான்கு அம்ச நியாயத்தீர்ப்பு - பாபிலோனிய சிறையிருப்பு (1:2-6)

II. கர்த்தருடைய நாள்

1. சமீபம் - ஏழு வகுப்பினர் தண்டிக்கப் படுவார்கள் (1:7-13)
2. சமீபம் - கர்த்தருடைய நாளின் ஏழு அம்ச குணாதிசயம் - காரணம் (1:14-18)

# செப்பனியா - முன்னுரை

**III.** புறஜாதியார்மீது பாபிலோனினால் நியாயத்தீர்ப்பு

1. யூதாவிற்கு ஐந்து அம்ச புத்திமதி (2:1-3)
2. பெலிஸ்தியாவிற்கு எதிராக (2:4-7)
3. மோவாபிற்கும் அம்மோனுக்கும் எதிராக (2:8-11)
4. எத்தியோப்பியாவிற்கு எதிராக (2:12)
5. அசீரியாவிற்கு எதிராக (2:13-15)

**IV.** யூதாவின் பதினான்கு அம்ச நீதிநெறி நிலை (3:1-7)

**V.** கடைசி நாட்கள்

1. அர்மகெதோன் (3:8)
2. தேசங்களின் மனமாற்றம் (3:9-10)
3. கலகக்காரர்கள் யூதாவிலிருந்து அகற்றப்படுவார்கள் (3:11-13)
4. மேசியா சீயோனில் ஆட்சி புரிகிறார் (3:14-17)
5. இஸ்ரவேலின் மீட்பு (3:18-20)

# செப்பனியா - தொகுப்புரை

## 1 அதிகாரம்

### I. யூதாவின்மீது உடனடி நியாயத்தீர்ப்பு

**1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி** - (2இராஜா 22:1-23:30; 2கொரி 34-35)

செப் 1:1 ஆமோனின் புத்திரனாகிய யோசியா என்னும் யூதா ராஜாவின் நாட்களிலே, எஸ்கியாவின்குமாரனுகிய ஆமரியாவுக்குக் குமாரனான கெதலியா என்பவனுடைய மகனாகிய கூஷின் குமாரன் செப்பனியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்.

“செப்பனியா” **(Zephaniah)** - இந்தப் பெயருக்குக் “கர்த்தரால் மறைக்கப்பட்டவர்” **"hidden by Jehovah"** என்று பொருள்.

**வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் “செப்பனியா”க்கள்**

1. தீர்க்கதரிசி (செப். 1:1)
2. லேவியன் (1நாளா. 6:36-38)
3. ஆசாரியன் (2இராஜா 25:18-30; எரே 21:1; எரே 29:25-29; எரே 37:3; எரே 52:24-29)
4. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன் (சக. 6:10-14)

**யோசியாவின் ராஜ்யபாரம்**

யூதா தேசம் விழுவதற்கும், பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் எருசலேம் நகரத்தை அழிப்பதற்கும் 53 வருஷங்களுக்கு முன்பாக யோசியா ராஜ்யபாரம் பண்ண ஆரம்பித்தான். இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தார் அசீரியருடைய சிறையிருப்புக்கு உட்பட்டார்கள். அந்தச் சிறையிருப்புக்கு 80 வருஷங்களுக்குப் பின்பு யோசியா ராஜ்யபாரம் பண்ண ஆரம்பிக்கிறான். யோசியாவின் காலத்து மறுமலர்ச்சி முடிவு பெறுவதற்கு முன்பாகச் செப்பனியா தீர்க்கதரிசனம் உரைக்க ஆரம்பிக்கிறார். இவருடைய காலத்தில் பாகாலில் மீதியானவைகள் இன்னும் அழிக்கப்படவில்லை. (செப். 1:1,4; 2இராஜா 23) செப்பனியாவின் தீர்க்கதரிசனம் யோசியாவினுடைய ஆட்சிக் காலத்தில் 12 ஆவது வருஷத்திற்கும், 18 ஆவது வருஷத்திற்கும் இடையில் கூறப்பட்டிருக்க வேண்டும். எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகியோரின் காலத்தில் செப்பனியாவும் ஊழியம் செய்து வந்தார்.

“செப்பனியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்” - பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கர்த்தருடைய வார்த்தை செப்பனியாவிற்கு உண்டாயிற்று. (செப் 1:1; 2தீமோ. 3:15-17; 2பேதுரு 1:21).

**2. பதினான்கு அம்ச நியாயத்தீர்ப்பு - பாபிலோனிய சிறையிருப்பு**

செப் 1:2 தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

செப் 1:3 மனுஷரையும் மிருகஜீவன்களையும் வாரிக்கொள்ளுவேன்; நான் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், இடறுகிறதற் கேதுவானவைகளையும் துன்மார்க்கரோடே கூட வாரிக்கொண்டு, தேசத்தில் உண்டான மனுஷரைச் சங்காரம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

செப் 1:4 நான் யூதாவின்மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின் மேலும் என் கையை நீட்டி, பாகாலில் மீதியாயிருக்கிறதையும், ஆசாரியர்களோடே கூட கெம்மரீம் என்பவர்களின் பேரையும்,

செப் 1:5 வீடுகளின்மேல் வான சேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர்பேரில் ஆணையிட்டு, மல்காமின் பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும்,

செப் 1:6 கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர் களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலு மிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன்.

# செப்பனியா - தொகுப்புரை

## 1 அதிகாரம்

**தீர்க்கதரிசன எண் - 1**

"தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன்......" (செப். 1:2-18) செப். 1:2-6 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. செப். 1:7-18 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன் (செப். 1:2).
2. மனுஷரையும் மிருகஜீவன்களையும் வாரிக்கொள்ளுவேன் (செப். 1:3).
3. நான் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், இடறுகிறதற்கேதுவானவை களையும் துன்மார்க்கரோடேகூட வாரிக் கொள்வேன்.
4. தேசத்தில் உண்டான மனுஷரைச் சங்காரம்பண்ணுவேன்.
5. நான் யூதாவின்மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின்மேலும் என் கையை நீட்டுவேன். (செப். 1:4).
6. பாகாலில் மீதியாயிருக்கிறதைச் சங்காரம் பண்ணுவேன்.
7. ஆசாரியர்களோடேகூட கெம்மரீம் என்பவர்களின் பேரையும் சங்காரம் பண்ணுவேன்.
8. வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்களைச் சங்காசம் பண்ணுவேன். (செப் 1:5)
9. கர்த்தர்பேரில் ஆணையிடுகிறவர் களைச் சங்காரம் பண்ணுவேன்.
10. மல்காமின் பேரில் ஆணையிட்டுப் பணிகிறவர்களைச் சங்காரம் பண்ணுவேன்.
11. கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களைச் சங்காரம் பண்ணுவேன். (செப். 1:6)
12. கர்த்தரைத் தேடாமலும், அவரைக் குறித்து விசாரியாமலுமிருக்கிறவர் களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன்.

**நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்**

1. கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது (செப். 1:7).
2. கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.
3. அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்.
4. கர்த்தருடைய யாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன். (செப். 1:8).
5. வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற யாவரையும் அந்நாளிலே தண்டிப்பேன். (செப். 1:9).
6. அந்நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும், நகரத்தின் இரண்டாம் பாகத்திலிருந்து அலறுதலும், மேடுகளிலிருந்து மகா சங்காரத்தின் இரைச்சலும் உண்டாகும். (செப். 1:10).
7. வர்த்தகரெல்லாரும் சங்காரமாவார்கள். (செப். 1:11).
8. காசுக்காரர் யாவரும் வெட்டுண்டு போவார்கள்.
9. அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக்கொளுத்திச் சோதித்து, வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர் களும், கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை தீமை செய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரை தண்டிப்பேன். (செப். 1:12).
10. அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும் (செப். 1:13).

# செப்பனியா - தொகுப்புரை

## 1 அதிகாரம்

11. அவர்களுடைய வீடுகள் பாழாய்ப்போகும்.

12. அவர்கள் வீடுகளைக் கட்டியும் அவைகளில் குடியிருக்கமாட்டார்கள்.

13. அவர்கள் திராட்சத்தோட்டங்களையும் நாட்டியும், அவைகளின் புரசத்தைக் குடிப்பதில்லை.

14. கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது (செப் 1:14)

15. அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்து வருகிறது.

16. பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான்.

17. அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள். அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள். (செப். 1:15-16).

18. நான் மனுஷரை வருத்தப்படுத்துவேன் (செப் 1:17).

19. அவர்கள் குருடரைப்போல் நடப்பார்கள்.

20. அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும். அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும்.

21. கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்க மாட்டாது (செப். 1:18).

22. அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் கர்த்தர் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்.

**கர்த்தர் வாரிக் கொள்ளும் காரியங்கள்**

வாரிக்கொள்ளுதல் என்பதற்கு "அகற்றிப் போட்டு அதை அழித்துப்போடுதல்" **"Take away, make an end of"** என்று பொருள். இந்த வாக்கியம் 3 முறை வலியுறுத்திக் கூறப் பட்டிருக்கிறது. (செப். 1:2-3)

1. மனுஷன்
2. மிருகஜீவன்
3. ஆகாயத்துப் பறவைகள்
4. சமுத்திரத்து மச்சங்கள்
5. இடறுகிறதற்கேதுவானவைகள்

"இடறுகிறதற்கேதுவானவைகள்" - இந்த வார்த்தை விக்கிரகங்களையும், தேசத்தில் அவை உண்டாக்கின அழிவையும் குறிக்கிறது. இதற்கான எபிரெய வார்த்தை "மக்ஷேலா" **(makshelah)** என்பதாகும்.

இடறுகிறதற்கேதுவானவை **(stumbling blocks) 4384. מַכְשֵׁלָה - mak-shay-law'**

பெ.பெ.சொ. - கேடு, இடறுகிறதற் கேதுவானவை **"stumblingblocks" "ruin"** (ஏசா3:6)

"நான் யூதாவின்மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின்மேலும்" - செப்பனியா தீர்க்கதரிசி யூதாவிற்கும், எருசலேமிற்கும் தீர்க்கதரிசனம் கூறுகிறார். அவர் எப்பிராயீமிற்கும், சமாரியாவிற்கும் தீர்க்கதரிசனம் கூறவில்லை. செப்பனியாவின் ஊழியத்திற்கு 80 வருஷங்களுக்கு முன்பாகவே எப்பிராயீம் தேசம் அழிந்துபோயிற்று.

"கெம்மரீம்" **(Chemarims)** - விக்கிரகாராதனையின் ஆசாரியர்கள் கெம்மரீம் என்று அழைக்கப்படுகிறார்கள். (2இராஜா 23:5, ஒசி 10:5) இவர்களுக்கும், பாகாலின் ஆசாரியர்களுக்கும் வித்தியாசம் உள்ளது. இவர்கள் மேடைகளில் ஆசாரிய ஊழியம் செய்தார்கள். கருப்பு வஸ்திரங்கள் அணிந்திருப்பார்கள். எபிரெய மொழியில் கெம்மரீம் என்னும் வார்த்தைக்கு "கருப்பு" என்னும் பொருளும் உள்ளது.

## செப்பனியா - தொகுப்புரை

### 1 அதிகாரம்

"மல்காம்" (Malcham) - இந்த வார்த்தைக்கு "ராஜாவின் சிலை அல்லது ராஜாவாகிய தேவன்" "the king-god, or king-idol" என்று பொருள்.

"கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்கள்" - கர்த்தர் இவர்களைச் சங்காரம் பண்ணுவார். (செப். 1:4-6) கர்த்தர் பொய்சொல்லமாட்டார். சங்காரம் பண்ணப்படும் பிரிவினரில் கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களும் அடங்குவார்கள்.

**சங்காரம் பண்ணப்படும் பிரிவினர்**

1. தேசத்தில் உண்டான மனுஷர் (செப். 1:3).
2. பாகாலில் மீதியாயிருக்கிறவர்கள். (செப். 1:4).
3. ஆசாரியர்களோடேகூட கெம்மரீம் என்பவர்களின் பேர்.
4. வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்கள். (செப். 1:5).
5. கர்த்தர்பேரில் ஆணையிட்டு, மல்காமின் பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்கள்.
6. கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்கள்.
7. கர்த்தரைத் தேடாமலும், அவரைக் குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்கள். (செப். 1:6).

### II. கர்த்தருடைய நாள்

**1. சமீபம் - ஏழு வகுப்பினர் தண்டிக்கப் படுவார்கள்**

செப் 1:7 கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது; கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்.

செப் 1:8 கர்த்தருடைய யாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன்.

செப் 1:9 வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற யாவரையும் அந்நாளிலே தண்டிப்பேன்.

செப் 1:10 அந்நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும், நகரத்தின் இரண்டாம் பாகத்திலிருந்து அலறுதலும், மேடுகளிலிருந்து மகா சங்காரத்தின் இரைச்சலும் உண்டாகுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

செப் 1:11 மக்தேஷின் குடிகளே அலறுங்கள்; வர்த்தகரெல்லாரும் சங்காரமானார்கள்; காசுக்காரர் யாவரும் வெட்டுண்டுபோனார்கள்.

செப் 1:12 அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக்கொளுத்திச் சோதித்து, வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர்களும், கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை தீமைசெய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரை தண்டிப்பேன்.

செப் 1:13 அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும்; அவர்களுடைய வீடுகள் பாழாய்ப்போகும்; அவர்கள் வீடுகளைக் கட்டியும், அவைகளில் குடியிருக்கமாட்டார்கள்; அவர்கள் திராட்சத்தோட்டங்களையும் நாட்டியும், அவைகளின் பழரசத்தைக் குடிப்பதில்லை.

**கர்த்தருடைய நாள்**

செப். 1:17-18 ஆகிய வசனங்களில் கர்த்தருடைய நாளைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தீர்க்கதரிசனத்தின் இந்தப் பகுதி வருங்காலத்தில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நிறைவேறும். கர்த்தருடைய நாளைப் பற்றிய விவரம் வருமாறு:

# செப்பனியா - தொகுப்புரை

## 1 அதிகாரம்

1. இது கர்த்தருடைய யாகத்தின் நாள். அர்மெகதோன் யுத்தத்தில் ஏராளமான ஜனங்கள் அழிக்கப்படுவதைப் பற்றி இந்த யாகம் குறிப்பிடுகிறது. (செப். 1:7-8; ஏசா 34:6; எரே 46:10; எசே 39:17-21; வெளி. 19:11-21).

2. இந்த யாகத்திற்கு விருந்தாளிகளைக் கர்த்தர் அழைத்திருக்கிறார். காட்டிலுள்ள மிருகங்களும், ஆகாயத்திலுள்ள பறவைகளும் அர்மெகதோனில் மரித்துப் போனவர்களின் பிரேதங்களைப் புசிக்கும். (எசே 39:17-21; மத் 24:27-28; லூக்கா 17:34-37; வெளி. 19:17-21).

3. கர்த்தருடைய யாகத்தின் நாளிலே அவர் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பார். (செப். 1:8-18).

4. கர்த்தருடைய யாகத்தின் நாளிலே அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும்; அவர்களுடைய வீடுகள் பாழாய்ப்போகும்; அவர்கள் வீடுகளைக் கட்டியும், அவைகளில் குடியிருக்கமாட்டார்கள்; அவர்கள் திராட்சத்தோட்டங்களையும் நாட்டியும், அவைகளின் பழரசத்தைக் குடிப்பதில்லை. (செப். 1:13).

5. கர்த்தருடைய பெரியநாள். (செப். 1:14).

6. அந்த நாள் உக்கிரத்தின் நாள். (செப். 1:15).

7. அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்.

8. அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்.

9. அது இருளும் அந்தகாரமுமான நாள்.

10. அது மப்பும் மந்தாரமுமான நாள்.

11. அது எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள். (செப். 1:16)

12. மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப் போல் நடக்கும் நாள். (செப். 1:17).

13. அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும் நாள்.

14. கர்த்தருடைய உக்கிரத்தின் நாள். இதில் மனுஷர் யாரும் தப்புவதில்லை. (செப். 1:18)

### மனுஷர் தண்டிக்கும் பிரிவினர்

1. அதிபதிகளும், ராஜகுமாரரும் (செப் 1:8)

2. மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிறவர்கள்.

3. வாசற்படியைத் தாண்டுகிறவர்கள். (செப். 1:9)

4. கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிறவர்கள்.

5. வர்த்தகர் (செப். 1:11)

6. காசுக்காரர்

7. வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர்கள் (செப். 1:12)

"மறுதேசத்து வஸ்திரம்" - கர்த்தர் யூதருக்கென்று விசேஷித்த வஸ்திரத்தைக் கொடுத்திருக்கிறார். அவருடைய வஸ்திரத்தின் நான்கு மூலைகளிலும் நீலநிறத்தில் தொங்கல்கள் இருக்கும். யூதருடைய வஸ்திரத்திற்கென்று வேறுசில குணாதிசயங்களும் உள்ளன. மறுதேசத்து வஸ்திரம் என்பது யூதருடைய வஸ்திரத்தைப் போன்றிருக்காது.

"வாசற்படியைத் தாண்டி" - புறஜாதியார் தங்களுடைய விக்கிரகங்களின் கோவில்களுக்குள் போகும்போது அதன் வாசற்படியை மிதிப்பதற்குப் பதிலாக அதைத் தாண்டிச் செல்வார்கள். அல்லது அதன்மீது தவழ்ந்து செல்வார்கள். தாகோனின் ஆலயத்தில் பெலிஸ்தியர்கள் இதுபோன்று வாசற்படியைத் தாண்டுவது வழக்கம். (1சாமு 5:4-5; எசே 9:3; எசே 10:4,18; எசே 46:2; எசே 47:1).

## செப்பனியா - தொகுப்புரை

### 1 அதிகாரம்

"மீன்வாசல்" - எருசலேம் நகரத்தின் வடக்கு அலங்கத்தில் மீன்வாசல் உள்ளது. அந்திக் கிறிஸ்து இந்தத் திசையிலிருந்து எருசலேம் நகரத்திற்குள் வருவான். (எசே 38:15).

"வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர்கள்" - திராட்சரசத்தில் வண்டல்களாகப் படிந்திருக்கும் ரசம் மிகவும் அடர்த்தியாக இருக்கும். அதுபோல மனுஷரும் தங்களுடைய குழப்பங்களில் அடர்த்தியாக இருக்கிறார்கள். அதிகமாகக் குழம்பியிருக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகத் தூஷணமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். (எரே 48:11; சங் 55:19).

**2. சமீபம் - கர்த்தருடைய நாளின் ஏழு அம்ச குணாதிசயம் - காரணம்**

செப் 1:14 கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்துவருகிறது; கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான்.

செப் 1:15 அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்.

செப் 1:16 அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்.

செப் 1:17 மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப்போல் நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன்; அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும்.

செப் 1:18 கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்க மாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம்பண்ணுவார்.

## செப்பனியா – தொகுப்புரை

### 2 அதிகாரம்

### III. புறஜாதியார்மீது பாபிலோனினால் நியாயத்தீர்ப்பு - (ஏசா 13-23; எரே 45-49; எசே 25-32; ஆமோ 1:1-2:3)

**1. யூதாவிற்கு ஐந்து அம்ச புத்திமதி**

செப் 2:1 விரும்பப்படாத ஜாதியே, கட்டளை பிறக்குமுன்னும், பதரைப்போல நாள் பறந்துபோகுமுன்னும் கர்த்தருடைய உக்கிரகோபம் உங்கள்மேல் இறங்குமுன்னும், கர்த்தருடைய கோபத்தின் நாள் உங்கள்மேல் வருமுன்னும்,

செப் 2:2 நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்.

செப் 2:3 தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்.

**தீர்க்கதரிசன எண் - 2**

“விரும்பப்படாத ஜாதியே, கட்டளை பிறக்கு முன்னும்......” (செப். 2:1-15) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

**நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்**

1. காத்சா குடியற்றுப் போகும். (செப். 2:4).
2. அஸ்கலோன் பாழாகும்.
3. அஸ்தோத்தைப் பட்டப் பகலிலே பறக்கடிப்பார்கள்.
4. எக்ரோன் வேரோடே பிடுங்கப்படும்.
5. சமுத்திரக்கரை குடிகளாகிய கிரேத்தியருக்கு ஐயோ! (செப். 2:5)
6. பெலிஸ்தியரைக் குடியில்லாதபடிக்குக் கர்த்தர் அழிப்பார்.
7. சமுத்திரக்கரை தேசம் மேய்ப்பர் தங்கும் குடில்களும் ஆட்டுத் தொழுங்களுமாகும். (செப். 2:6).
8. அந்த தேசம் யூதா வம்சத்தாரில் மீதியானவர்களின் வசமாகும் (செப். 2:7).
9. அவர்கள் அவ்விடங்களில் மந்தை மேய்ப்பார்கள்.
10. அஸ்கலோனின் வீடுகளிலே சாயங் காலத்திலே படுத்துக்கொள்வார்கள்.
11. தேவனாகிய கர்த்தர் அவர்களை விசாரித்து, அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவார்.
12. மோவாப் சோதோமைப்போலாகும். (செப். 2:9).
13. அம்மோன் புத்திரரின் தேசம் கொமோராவைப்போலாகும்.
14. என் ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக் கொள்ளையிடுவார்கள்.
15. கர்த்தர் அவர்கள்மேல் கெடியாயிருப்பார் (செப். 2:11).
16. தீவுகளிலுள்ள சகல புறஜாதிகளும் அவரவர் தங்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து அவரைப் பணிந்து கொள்வார்கள்.
17. எத்தியோப்பியர் பட்டயத்தினால் கொலை செய்யப்படுவார்கள். (செப். 2:12).
18. அவர் தமது கையை வடதேசத்துக்கு விரோதமாய் நீட்டி, அசீரியாவை அழித்து நினிவேயைப் பாழும் வனாந்தரத்துக் கொத்த வறட்சியுமான ஸ்தலமாக்குவார். (செப். 2:13).
19. அதின் நடுவில் மந்தைகள் படுத்துக் கொள்ளும். (செப். 2:14).
20. ஜாதிஜாதியான சகல மிருகங்களும் படுத்துக்கொள்ளும்.
21. அதினுடைய சிகரங்களின்மேல் நாரையும் கோட்டானும் இராத்தங்கும்.

# செப்பனியா - தொகுப்புரை

## 2 அதிகாரம்

22. பலகணிகளில் கூவுகிற சத்தம் பிறக்கும்.

23. வாசற்படிகளில் பாழ்க்கடிப்பு இருக்கும்.

24. கேதுருமரங்களின் மச்சைத் திறப்பாக்கிப்போடுவார்.

25. நிர்விசாரமாய் வாழ்ந்து களிகூர்ந்திருந்த நகரம் பாழும் மிருகஜீவன்களின் தாபரமுமாய்ப் போகும். (செப். 2:15).

26. அதின் வழியாய்ப் போகிறவன் எவனும் ஈசல் போட்டுத் தன் கையைக் கொட்டுவான்.

**யூதாவிற்குக் கூறப்பட்டிருக்கும் ஆலோசனை**

1. கர்த்தருடைய உக்கிரகோபம் உங்கள்மேல் இறங்கு முன்னும், கர்த்தருடைய கோபத்தின் நாள் உங்கள்மேல் வருமுன்னும், நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள். (செப். 2:1-2).
2. நீங்கள் கூடிவாருங்கள். (செப். 2:2).
3. கர்த்தரைத் தேடுங்கள். (செப். 2:3).
4. நீதியைத் தேடுங்கள்.
5. மனத்தாழ்மையைத் தேடுங்கள்.

"கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப் படுவீர்கள்" - அந்திக் கிறிஸ்துவிடமிருந்து இஸ்ரவேல் மறைக்கப்படும். மகா உபத்திரவத்தின் காலத்தில் இஸ்ரவேல் பாதுகாக்கப்படும். (ஏசா 16:1-5; ஏசா 26:20-21; சங் 60:8; மத் 24:15-22; வெளி 12:6,14).

**2. பெலிஸ்தியாவிற்கு எதிராக** - (ஏசா 14:27)

செப் 2:4 காத்சா குடியற்று, அஸ்கலோன் பாழாகும்; அஸ்தோத்தைப் பட்டப் பகலிலே துறக்கடிப்பார்கள்; எக்ரோன் வேரோடேபிடுங்கப்படும்.

செப் 2:5 சமுத்திரக்கரை குடிகளாகிய கிரேத்தியருக்கு ஐயோ! பெலிஸ்தரின் தேசமாகிய கானானே, கர்த்தருடைய வார்த்தை உனக்கு விரோதமாயிருக்கிறது; இனி உன்னில் குடியில்லாதபடிக்கு உன்னை அழிப்பேன்.

செப் 2:6 சமுத்திரக்கரை தேசம் மேய்ப்பர் தங்கும் குடில்களும் ஆட்டுத் தொழுவங்களுமாகும்.

செப் 2:7 அந்த தேசம் யூதா வம்சத்தாரில் மீதியானவர்களின் வசமாகும்; அவர்கள் அவ்விடங்களில் மந்தை மேய்ப்பார்கள்; அஸ்கலோனின் வீடுகளிலே சாயங் காலத்திலே படுத்துக் கொள்வார்கள்; அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களை விசாரித்து, அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவார்.

**3. மோவாபிற்கும் அம்மோனுக்கும் எதிராக** - (ஏசா 15:1; எரே 49:1)

செப் 2:8 மோவாப் செய்த நிந்தனையையும், அம்மோன் புத்திரர் என் ஜனத்தை நிந்தித்து, அவர்கள் எல்லையைக் கடந்து பெருமைபாராட்டிச் சொன்ன தூஷணங்களையும் கேட்டேன்.

செப் 2:9 ஆகையால் மோவாப் சோதோமைப்போலும், அம்மோன் புத்திரரின் தேசம் கொமோராவைப் போலுமாகி, காஞ்செறி படரும் இடமும், உப்புப் பள்ளமும், நித்திய பாழுமாயிருக்கும்; என் ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக் கொள்ளை யிட்டு, என் ஜாதியில் மீதியானவர்கள் அவர்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.

செப் 2:10 அவர்கள் சேனைகளுடைய கர்த்தரின் ஜனத்துக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டி அவர்களை நிந்தித்தபடியினால், இது அவர்கள் அகங்காரத்துக்குப் பதிலாக அவர்களுக்குக் கிடைக்கும்.

## செப்பனியா - தொகுப்புரை

### 2 அதிகாரம்

செப் 2:11 கர்த்தர் அவர்கள்மேல் கெடியாயிருப்பார்; பூமியிலுள்ள தேவர்களையெல்லாம் மெலிந்துபோகப் பண்ணுவார்; அப்பொழுது தீவுகளிலுள்ள சகல புறஜாதிகளும் அவரவர் தங்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து அவரைப் பணிந்துகொள்வார்கள்.

"மோவாப் சோதோமைப்போலும்" - மோவாபும், அம்மோனும் சோதோம், கொமோராவைப்போல அழிந்துபோகும். அந்த அழிவு நித்திய பாழாயிருக்கும். இஸ்ரவேல் தேசத்தார் அவர்களுடைய தேசத்தைச் சுதந்தரிப்பார்கள். மோவாப், அம்மோன் ஆகியோரின் பாவங்களின் நிமித்தம் இஸ்ரவேல் தேசத்தாரில் மீதியானவர்கள் அவர்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (செப். 2:8-11)

"அவரவர் தங்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து அவரைப் பணிந்து கொள்வார்கள்" - பூமியிலுள்ள அனைவரும் முடிவில் கர்த்தரைத் துதிப்பார்கள். (மல் 1:11).

**4. எத்தியோப்பியாவிற்கு எதிராக** - (ஏசா 18:1)

செப் 2:12 எத்தியோப்பியராகிய நீங்களும் என் பட்டயத்தினால் கொலைசெய்யப் படுவீர்கள்.

**5. அசீரியாவிற்கு எதிராக** - (ஏசா 10:28)

செப் 2:13 அவர் தமது கையை வடதேசத்துக்கு விரோதமாய் நீட்டி, அசீரியாவை அழித்து நினிவேயைப் பாழும் வனாந்தரத்துக்கொத்த வறட்சியுமான ஸ்தலமாக்குவார்.

செப் 2:14 அதின் நடுவில் மந்தைகளும் ஜாதிஜாதியான சகல மிருகங்களும் படுத்துக்கொள்ளும்; அதினுடைய சிகரங்களின்மேல் நாரையும் கோட்டானும் இராத்தங்கும்; பலகணிகளில் கூவுகிற சத்தம் பிறக்கும்; வாசற்படிகளில் பாழ்க்கடிப்பு இருக்கும்; கேதுருமரங்களின் மச்சைத் திறப்பாக்கிப்போடுவார்.

செப் 2:15 நான்தான், என்னைத்தவிர வேறொருவரும் இல்லை என்று தன் இருதயத்தில் சொல்லி, நிர்விசாரமாய் வாழ்ந்து களிகூர்ந்திருந்த நகரம் இதுவே; இது பாழும் மிருகஜீவன்களின் தாபரமுமாய்ப் போய்விட்டதே! அதின் வழியாய்ப் போகிறவன் எவனும் ஈசல் போட்டுத் தன் கையைக் கொட்டுவான்.

"அவர் தமது கையை வடதேசத்துக்கு விரோதமாய் நீட்டி, அசீரியாவை அழித்து" - வடதிசை தேசங்கள் யூதாவுக்கு விரோதமாக வரும்போது கர்த்தர் அந்தத் தேசங்களை நியாயம் விசாரிப்பார். அசீரியா அழிக்கப்படும். ஒரு காலத்தில் நினிவே இருந்த இடம் அழிந்துபோகும். அது வனாந்தரம் போலிருக்கும். மிருகஜீவன்களும், கோட்டானும் அங்கு தங்கும். (செப். 2:13-14).

"நினிவேயைப் பாழும் வனாந்தரத்துக்கொத்த வறட்சியுமான ஸ்தலமாக்குவார்" - தன்னைப் போல வேறு எந்தப் பட்டணமும் சிறப்பாக இல்லையென்று, நினிவே பெருமைப்பட்டது. ஆனால் அந்த நினிவே முழுவதுமாக அழிக்கப்படும். அதின் வழியாய்ப் போகிறவன் எவனும் ஈசல் போட்டுத் தன் கையைக் கொட்டுவான். (செப். 2:15).

# செப்பனியா – தொகுப்புரை

## 3 அதிகாரம்

### IV. யூதாவின் பதினான்கு அம்ச நீதிநெறி நிலை - (1:5)

செப் 3:1 இடுக்கண் செய்து, ஊத்தையும் அழுக்குமாயிருக்கிற நகரத்துக்கு ஐயோ!

செப் 3:2 அது சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை; அது கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளவில்லை; கர்த்தரை நம்பவில்லை; அது தன் தேவனிடத்தில் சேரவில்லை.

செப் 3:3 அதற்குள்ளே இருக்கிற அதின் அதிபதிகள் கெர்ச்சிக்கிற சிங்கங்கள்; அதின் நியாயாதிபதிகள் சாயங்காலத்தில் புறப்படுகிறதும் விடியற்காலமட்டும் ஒரு எலும்பையும் மீதியாக வைக்காததுமான ஓநாய்கள்.

செப் 3:4 அதின் தீர்க்கதரிசிகள் வீண் பெருமையும் வஞ்சகமுமுள்ளவர்கள்; அதின் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, வேதத்துக்கு அநியாயஞ்செய்தார்கள்.

செப் 3:5 அதற்குள் இருக்கிற கர்த்தர் நீதியுள்ளவர்; அவர் அநியாயஞ் செய்வதில்லை; அவர் குறைவில்லாமல் காலைதோறும் தம்முடைய நியாயத்தை விளங்கப்பண்ணுகிறார்; அநியாயக் காரனோ வெட்கம் அறியான்.

செப் 3:6 ஜாதிகளைச் சங்கரித்தேன்; அவர்கள் துருகங்கள் பாழாயின; அவர்களுடைய வீதிகளை ஒருவரும் கடந்து போகாதபடிக்குப் பாழாக்கினேன்; அவர்களுடைய பட்டணங்கள் மனுஷர் இல்லாதபடிக்கும் குடியில்லாதபடிக்கும் அவாந்தரையாயின.

செப் 3:7 உன் வாசஸ்தலம் நிர்மூலமாகாதபடிக்கு நீ எனக்குப் பயந்து, கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள் என்றேன்; நான் அவர்களை எப்படி தண்டித்தாலும், அவர்கள் அதிகாலையில் எழுந்து தங்கள் கிரியைகளையெல்லாம் கேடாக்கினார்கள்.

"நகரத்துக்கு ஐயோ" - பெலிஸ்தியா (செப். 3:4-7), மோவாபும், அம்மோனும் (செப். 3:8-11), எத்தியோப்பியா (செப். 3:12), அசீரியா (செப். 3:13-15) ஆகிய தேசங்கள்மீது நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படுகிறது. அதன் பின்பு, தீர்க்கதரிசி யூதாவிற்கும், எருசலேமிற்கும் வரப்போகும் ஐயோவை முன்னறிவிக்கிறார். (செப். 3:1-7).

**எருசலேமின் நீதிநெறி நிலமை**

1. இடுக்கண் செய்கிறது. (செப். 3:1)
2. ஊத்தையும் அழுக்குமாயிருக்கிறது.
3. அது சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை. (செப். 3:2).
4. அது கடிந்துகொள்ளுதலை ஏற்றுக் கொள்ளவில்லை.
5. கர்த்தரை நம்பவில்லை.
6. அது தன் தேவனிடத்தில் சேரவில்லை.
7. அதற்குள்ளே இருக்கிற அதின் அதிபதிகள் கெர்ச்சிக்கிற சிங்கங்கள் (செப். 3:3).
8. அதின் நியாயாதிபதிகள் ஓநாய்கள்.
9. அவர்கள் இரவில் பொல்லாப்பு செய்தார்கள்.
10. அதின் தீர்க்கதரிசிகள் வீண்பெருமையுள்ளவர்கள். (செப். 3:4)
11. அவர்கள் வஞ்சகமுள்ளவர்கள்.
12. அதின் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினார்கள்.
13. வேதத்துக்கு அநியாயஞ்செய்தார்கள்.
14. அவர்கள் அதிகாலையில் எழுந்து தங்கள் கிரியைகளையெல்லாம் கேடாக்கினார்கள். (செப். 3:7).

# செப்பனியா - தொகுப்புரை

## 3 அதிகாரம்

**கர்த்தரைப் பற்றிய சத்தியம்**

1. கர்த்தர் நீதியுள்ளவர் (செப். 3:5).
2. கர்த்தர் தமது ஜனங்கள் நடுவில் இருக்கிறார்.
3. அவர் அநியாயஞ்செய்வதில்லை.
4. அவர் தம்முடைய நியாயத்தை விளங்கப் பண்ணுகிறார்.
5. அவர் அநியாயக்காரனை விட்டு விடுவதில்லை.
6. ஜாதிகளைச் சங்கரிக்கிறார். (செப். 3:6).
7. அவர்களுடைய வீதிகளை ஒருவரும் கடந்து போகாதபடிக்குப் பாழாக்குகிறார்.
8. தம்முடைய சொந்த ஜனத்தைத் தண்டிக்கிறார். (செப். 3:7).

“உன் வாசஸ்தலம் நிர்மூலமாகாதபடிக்கு நீ எனக்குப் பயந்து” - ஆபிரகாமின் விசுவாசமும், உண்மையும் கர்த்தருக்குத் தெரியும். (ஆதி 18:19) இதனால் கர்த்தர் இஸ்ரவேல்மீது நம்பிக்கை வைத்தார். அவர்கள் தமக்குப் பயப்படுவார்கள் என்றும், தம்முடைய உபதேசத்தைக் கேட்பார்கள் என்றும், கர்த்தர் எதிர்பார்த்தார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள். கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போய்விட்டார்கள். அவர்களுடைய செயல்களினால் கர்த்தர் ஏமாற்றமடைந்தார். அவர்கள்மீது கர்த்தர் வைத்திருந்த நம்பிக்கை அழிந்துபோயிற்று. அவர்கள் தங்களுடைய எல்லாக் கிரியைகளிலும் அநியாயம் செய்கிறார்கள். ஆனாலும் இஸ்ரவேல் ஜனத்தார் வருங்காலத்தில் மனந்திரும்பி தம்மிடத்தில் வருவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். தம்முடைய சித்தத்திற்கு அவர்கள் ஒத்து வருவார்கள் என்று கர்த்தர் நம்புகிறார். அதுவரையிலும் கர்த்தர் அவர்களுக்காகக் கிரியை செய்துகொண்டிருக்கிறார். வருங்கால உபத்திரவக்காலத்தின்போது இஸ்ரவேல் தேசத்தார் அனைவரும் கர்த்தரிடத்தில் முழுவதுமாக மனந்திரும்பி சேருவார்கள். (சக. 12:10-13:1,8-9; ரோமர் 11:25-29).

“நான் அவர்களை எப்படி தண்டித்தாலும்” - நன்மை செய்கிறவர்களைக் கர்த்தர் ஆசீர்வதிப்பதைப்போலவே தீமை செய்கிறவர்களைத் தண்டிப்பதிலும் அவர் உண்மையுள்ளவர். (சக. 13:8-9).

### V. கடைசி நாட்கள் - (ஏசா 2:1)

**1. அர்மகெதோன்** - (யோவே 3; சக 14)

செப் 3:8 ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்.

**தீர்க்கதரிசன எண் - 3**

“ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;.........” (செப். 3:8-20) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

**நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்**

1. நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் (செப். 3:8).
2. பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்.
3. அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன். (செப். 3:3.9)
4. எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலிருந்து என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறவர்களாகிய சிதறடிக்கப் பட்டவர்களின் குமாரத்தியானவள் எனக்குக் காணிக்கை கொண்டுவருவாள். (செப். 3:10).

# செப்பனியா – தொகுப்புரை

## 3 அதிகாரம்

5. எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின, நீ செய்த உன் எல்லாக் கிரியைகளினிமித்தமும் அந்நாளிலே வெட்கப்படாதிருப்பாய். (செப். 3:11).

6. அப்பொழுது நான் உன் பெருமையைக் குறித்துக் களிகூர்ந்தவர்களை உன் நடுவிலிருந்து விலக்கிவிடுவேன்.

7. நீ இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ளமாட்டாய்.

8. உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன் (செப். 3:12).

9. இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ் செய்வதில்லை (செப். 3:13)

10. அவர்கள் பொய் பேசுவதுமில்லை.

11. வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை.

12. அவர்கள் தங்களைப் பயப் படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக் கொள்வார்கள்.

13. கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றுவார். (செப். 3:15)

14. உன் சத்துருக்களை விலக்குவார்.

15. இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருப்பார்.

16. இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.

17. அந்நாளிலே எருசலேமைப் பார்த்து, பயப்படாதே என்றும், சீயோனைப் பார்த்து, உன் கைகளைத் தளரவிடாதே என்றும் சொல்லப்படும். (செப். 3:3:16).

18. உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார் (செப். 3:17).

19. அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழுவார்.

20. தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்.

21. பண்டிகை ஆசரிப்பில்லாமையால் உண்டான நிந்தையினிமித்தம் சஞ்சலப் பட்டவர்களை நான் ஏகமாய்க் கூட்டிக் கொள்ளுவேன். (செப். 3:18).

22. அக்காலத்திலே உன்னைச் சிறுமைப் படுத்தின யாவரையும் தண்டிப்பேன் (செப். 3:19).

23. நொண்டியானவனை இரட்சிப்பேன்.

24. தள்ளுண்டவனைச் சேர்த்துக் கொள்ளுவேன்.

25. அவர்கள் வெட்கம் அநுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வேன்.

26. அக்காலத்திலே உங்களைக் கூட்டிக் கொண்டுவருவேன்; அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக்கொள்ளுவேன். (செப். 3:20).

27. உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்புவேன்.

28. பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன்.

"நான் தீர்மானம்பண்ணினேன்" - இந்த வாக்கியம் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அர்மெகதோன் யுத்தத்தில் கர்த்தர் எல்லா தேசங்களையும் தண்டிக்க வேண்டுமென்று திட்டம் பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்து தேவனுடைய அறிவும், ஆலோசனையும் தேவனால் தீர்மானம் பண்ணப்பட்டிருக்கிறது. (அப் 2:23). தேவனுடைய திட்டம் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக 10 இடங்களில் கூறப்பட்டிருக்கிது. (2 நாளா. 25:16; ஏசா 10:23; ஏசா 19:17; ஏசா 28:22; தானி 9:24-27; தானி 11:36; அப் 4:28; அப் 17:26).

# செப்பனியா - தொகுப்புரை

## 3 அதிகாரம்

**கர்த்தர் வருங்காலத்தில் தேசங்களைக் கூட்டும் சம்பவங்கள்**

1. எல்லா தேசங்களிலிருந்தும் இஸ்ரவேலைக் கூட்டிச் சேர்ப்பார். (உபா. 30:3-4; ஏசா 11:10-12; ஏசா 43:5; ஏசா 54:7; எரே 29:14; எரே 31:8-10; எரே 32:37; எசே 11:17; எசே 20:34,41; எசே 34:13; எசே 36:24; எசே 37:21; எசே 38:8-13; எசே 39:27-28; ஓசி 1:11; மீகா 3:12; மீகா 4:6; செப். 3:19-20; சக. 10:8-10; மத் 24:31; மாற்கு 13:27)

2. அர்மெகதோனுக்கு எல்லா தேசங்களையும் கூட்டிச் சேர்ப்பார். (யோவே 3:2; செப். 3:8; சக. 14:2; வெளி. 16:13-16; வெளி. 19:19-21)

3. நியாயத்தீர்ப்புக்கு எல்லா தேசங்களையும் கூட்டிச் சேர்ப்பார். (மத் 13:20,41; மத் 25:31-32)

4. தம்முடைய மகிமையைக் காண எல்லா தேசங்களையும் கூட்டிச் சேர்ப்பார். (ஏசா 66:18)

5. அர்மெகதோனில் மரித்துப்போன மனுஷருடைய பிரேதங்களைப் புசிப்பதற்குப் பறவைகளையும் மிருகங்களையும் கூட்டிச் சேர்ப்பார். (எசே 39:17-21; மத் 24:27-28; லூக்கா 17:34-37; வெளி. 19:17-21)

6. பாதாளத்தில் தள்ளுவதற்குச் சாத்தானையும், அவனுடைய சர்வ சேனையையும் கூட்டிச் சேர்ப்பார். (ஏசா 24:22; வெளி. 20:3)

7. மத்திய ஆகாயத்தில் கர்த்தரைச் சந்திப்பதற்கு எல்லா பரிசுத்த வான்களையும் கூட்டிச் சேர்ப்பார். (யோவான் 14:1-3; 1தெச. 4:13-17; 2தெச. 2:1,7)

8. பரலோகத்திலும், பூமியிலுமுள்ள எல்லாக் காரியங்களையும் கூட்டிச் சேர்ப்பார். (எபே. 1:10)

**2. தேசங்களின் மனமாற்றம்**

செப் 3:9 அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்.

செப் 3:10 எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலிருந்து என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறவர்களாகிய சிதறடிக்கப் பட்டவர்களின் குமாரத்தியானவள் எனக்குக் காணிக்கை கொண்டுவருவாள்.

"சுத்தமான பாஷை" - இதற்கான எபிரெய வார்த்தை "பரார்சப்பா" **"barar saphah"** என்பதாகும். இதற்கு "சுத்த உதடுகள்" **"cleansed or purged lips"** என்று பொருள். இந்த வார்த்தை "அசுத்த உதடுகள்" **"unclean lips"** என்னும் வார்த்தையின் எதிர்பதமாகும். (ஏசா 6:5). தம்மை ஆராதிப்பதற்கும், தம்மைச் சேவிப்பதற்கும் கர்த்தர் எல்லா ஜனங்களையும் தகுதிப்படுத்துவார்.

"சிதறடிக்கப் பட்டவர்களின் குமாரத்தியானவள்" - இஸ்ரவேல் ஜனம்.

**3. கலகக்காரர்கள் யூதாவிலிருந்து அகற்றப்படுவார்கள்**

செப் 3:11 எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி, நீ செய்த உன் எல்லாக் கிரியைகளினிமித்தமும் அந்நாளிலே வெட்கப்படாதிருப்பாய்; அப்பொழுது நான் உன் பெருமையைக்குறித்துக் களிகூர்ந்தவர்களை உன் நடுவிலிருந்து விலக்கிவிடுவேன்; நீ இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ளமாட்டாய்.

செப் 3:12 உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன்; அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள்.

## செப்பனியா – தொகுப்புரை

### 3 அதிகாரம்

செப் 3:13 இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ் செய்வதில்லை; அவர்கள் பொய் பேசுவதுமில்லை; வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப் படுவதுமில்லை; அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக்கொள்வார்கள்.

"நீ இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ளமாட்டாய்" - (சக. 13:8-9)

"உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன்" - சிறுமையும், எளிமையும் என்பது சரீர வியாதியைக் குறிக்காது. ஏனெனில் ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் மனுஷருக்கு நோயோ, வியாதியோ இராது. (ஏசா 33:24; ஏசா 35:5-6; வெளி. 21:3-7).

"இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ் செய்வதில்லை" - இஸ்ரவேலர் எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள். பரிசுத்தமாய் இருப்பார்கள். (ரோமர் 11:25-29).

**4. மேசியா சீயோனில் ஆட்சி புரிகிறார்** - (ஏசா 4:2-9; 9:6-7; சக 14:1-21; லூக் 1:32-33; வெளி 20)

செப் 3:14 சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு; இஸ்ரவேலரே, ஆர்ப்பரியுங்கள்; எருசலேம் குமாரத்தியே, நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு.

செப் 3:15 கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.

செப் 3:16 அந்நாளிலே எருசலேமைப் பார்த்து, பயப்படாதே என்றும், சீயோனைப் பார்த்து, உன் கைகளைத் தளரவிடாதே என்றும் சொல்லப்படும்.

செப் 3:17 உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்.

**வருங்கால நித்திய இஸ்ரவேலுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்**

1. கெம்பீரித்துப்பாடு.
2. ஆர்ப்பரி.
3. முழு இருதயத்தோடும் மகிழ்ச்சியாயிரு.
4. களிகூரு.

**இஸ்ரவேல் மகிழ்ந்து களிகூர வேண்டும் - காரணம்**

1. கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணி, அவர்கள் செய்த எல்லாக் கிரியைகளினிமித்தமும் அந்நாளிலே வெட்கப்படாதிருப்பார்கள். (செப். 3:11).
2. கர்த்தர் அவர்களுடைய பெருமையைக் குறித்துக் களிகூர்ந்தவர்களை அவர்கள் நடுவிலிருந்து விலக்கிவிடுவார்.
3. கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ளமாட்டார்கள்.
4. அவர்கள் சிறுமையும் எளிமையுமாக இருப்பார்கள்.
5. அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள்.
6. அவர்கள் அநியாயஞ்செய்வதில்லை (செப். 3:13)
7. அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக்கொள்வார்கள்.
8. கர்த்தர் அவர்களுடைய ஆக்கினைகளை அகற்றுவார். (செப் 3:15).
9. அவர்களுடைய சத்துருக்களை விலக்குவார்.

**3 அதிகாரம்**

10. இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் அவர்கள் நடுவிலே இருக்கிறார்.

11. இனித் தீங்கைக் காணாதிருப்பார்கள்.

12. இனி பயப்படமாட்டார்கள். (செப். 3:16)

13. அவர்களுக்குச் செழிப்பும் ஆசீர்வாதமும் உண்டாயிருக்கும்.

14. தேவனாகிய கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறார். (செப். 3:17).

15. தேவன் அவர்களை இரட்சிப்பார்.

16. கர்த்தர் அவர்கள்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்.

17. அவர்களைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பார். (செப். 3:19).

18. அவர்கள் எல்லோரையும் சேர்த்துக் கொள்வார்.

19. அவர்கள் வெட்கம் அநுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வார்.

20 பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் கர்த்தர் அவர்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பார். (செப் 3:20)

**5. இஸ்ரவேலின் மீட்பு**

செப் 3:18 உன் சபையின் மனுஷராயிருந்து, பண்டிகை ஆசரிப்பில்லாமையால் உண்டான நிந்தையினிமித்தம் சஞ்சலப்பட்டவர்களை நான் ஏகமாய்க் கூட்டிக் கொள்ளுவேன்.

செப் 3:19 இதோ, அக்காலத்திலே உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன்; நொண்டியானவனை இரட்சித்து, தள்ளுண்டவனைச் சேர்த்துக் கொள்ளுவேன்; அவர்கள் வெட்கம் அநுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வேன்.

செப் 3:20 அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டு வருவேன்; அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக் கொள்ளுவேன்; உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும் போது, பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

“சஞ்சலப்பட்டவர்களை நான் ஏகமாய்க் கூட்டிக் கொள்ளுவேன்” - யூதா கோத்திரத்தார் மட்டும் என்றல்லாமல் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் கர்த்தர் சகல தேசங்களிலுமிருந்தும் கூட்டிச் சேர்ப்பார். (செப். 3:18-20; ஏசா11:11-14)

“உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும்” - இஸ்ரவேல் புத்திரர் பலவிதமான சிறுமைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். அவர்களுக்கு வேதனையும், வியாதியும் உண்டாயிற்று. இவைதவிர, அவர்களுக்கு மேலும் பல சிறுமைகளும் உண்டாயிற்று.

“தள்ளுண்டவன்” - பாவத்தின் நிமித்தமாகத் தள்ளுண்டவன். அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இரட்சிக்கப்படுவார்கள். (ரோமர் 11:25-29; சக. 12:10-13:1,8-9).

**தேவன் இஸ்ரவேலுக்குச் செய்யப்போகும் காரியங்கள்**

1. அவர்கள் வெட்கம் அநுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சி உண்டாகச் செய்வார். (செப். 3:19).
2. அவர்களுக்கு எல்லா தேசங்களிலும் கீர்த்தி உண்டாகச் செய்வார்.
3. பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் அவர்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பார். (செப். 3:20).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குப் பல வாக்குத்தத்தங்களை அறிவித்திருக்கிறார். அந்த வாக்குத்தத்தங்களில் இவை மிகவும் முக்கியமானவையாகும். பல காலமாக இஸ்ரவேல் புத்திரர் புறஜாதி தேசங்களில் சிதறிப்போயிருந்தார்கள். அந்நிய ஜனங்கள் மத்தியில் அவர்கள் வசைச்சொல்லாகவும், பழமொழியாகவும் இருந்தார்கள். அப்படிப் பட்டவர்களைக் கர்த்தர் உயர்த்தப் போவதாக வாக்குப்பண்ணுகிறார்.

“உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது” - சிறையிருப்பும், சிதறிப்போவதும். (லூக்கா 21:20-24).

## செப்பனியா – தொகுப்புரை

**3 அதிகாரம்**

**புத்தகத்தலைப்பின் முக்கியத்துவம்**

புத்தகத்தின் ஆசிரியரான செப்பனியா என்னும் பெயரே இந்தப் புத்தகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

**மிகச் சிறிய அதிகாரம்**

2 (15 வசனங்கள்)

**மிக நீண்ட அதிகாரம்**

3 (20 வசனங்கள்)

**மொத்த அதிகாரங்கள்:** 3

**முக்கிய வேதவசனம்**

"உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன்; அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள்" (செப்பனியா 3:12)

**முன்னுரை**

யோசியாவின் ஆட்சிக் காலத்தில் எழுப்புதலின் நாட்களில் செப்பனியா யூதாவுக்கும், எருசலேமுக்கும் எதிராக தீர்க்கதரிசனம் உரைத்தான். யூதாவின் மிக மோசமான ராஜாக்களில் ஒருவனான மனாசேயின் ஆட்சிக் காலத்தில் தேசமும், ஜனங்களும் சீர்கெட்டுப் போயிருந்தார்கள்.

தெற்கு ராஜ்ஜியத்தின்மீது தேவனுடைய பொறுமை அதிகமாய் வெளிப்பட்டது. இந்தப் புத்தகம் நியாயத்தீர்ப்பைப் பற்றிய எச்சரிப்பாக இருந்தபோதிலும், வருங்காலத்தில் தேவனுடைய ஜனங்கள் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் என்னும் நம்பிக்கையையும் செப்பனியா கொடுத்தார்.

**புத்தகத்தின் பொதுவான சுருக்க வருணனை**

1. யூதாவின் பாவங்களுக்கு எதிரான நியாயத்தீர்ப்பு (அதிகாரம் 1)
2. பெலிஸ்தியர், மோவாப், அம்மோன், எத்தியோப்பியா, அசீரியா ஆகிய தேசங்களின்மீது நியாயத்தீர்ப்புகள் (அதிகாரம் 2)
3. வருங்காலத்தில் மறுபடியும் திரும்ப கூட்டிச் சேர்க்கப்படுவதற்குக் காத்திருத்தல் (அதிகாரம் 3)